**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.**

**முன்னிலை : திருமதி. G. சுபத்திராதேவி., எம்.எல்.,**

**முதன்மை மாவட்ட நீதிபதி, கடலூர்.**

**2026-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 15-ஆம் நாள் புதன் கிழமை**

**Tr.O.P. No.132/2025**

**(TN CD 01-008898-2025)**

1. பழனிவேல்
2. செல்வமணி
3. அ.கொளஞ்சி .. மனுதாரர்கள்

/எதிராக/

1. பாரதிராஜா (எ) பாரதிராஜ்
2. அஜீத்குமார்
3. கதிர்வேல்
4. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   கடலூர் மாவட்டம், கடலூர்.
5. கோட்டாட்சியர்,
   விருத்தாசலம்
6. தாசில்தார், திட்டக்குடி
7. குறுவட்ட நில அளவர்,
   ( பெண்ணாடம் குறுவட்டம்),
   திட்டக்குடி.
8. வட்ட சார் ஆய்வாளர்,
   பெண்ணாடம்,
9. கிராம நிர்வாக அலுவலர்
   கிளிமங்கலம் கிராமம்.
10. மாவட்ட பதிவாளர்,
    விருத்தாசலம்.

11. சார்பதிவாளர்,
பெண்ணாடம்.

12. செ.கொளஞ்சியம்மாள்

13. வளர்மதி. .. எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது என் முன்பு 18.03.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.வெங்கடேசன் அவர்களும், 4 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.கே.இராமன் அவர்கள் முன்னிலையாகியும், 1,2,3, 12 மற்றும் 13 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், 1,2,3, 12 மற்றும் 13 எதிர்மனுதாரர்களைத் தோன்றாத் தரப்பினர்களாகக் கருதப்பட்டும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்

**உத்தரவு**

திட்டக்குடி, கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.24/2024-ஐ திரும்ப பெற்று, மேற்படி அசல் வழக்கினை, திட்டக்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றி, அந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.109/2023 என்ற வழக்குடன் கூட்டு விசாரணை (Joint Trial) நடத்தவும், இம்மனுவின் செலவு தொகை மனுதாரர்களுக்கு, எதிர்மனுதாரர்கள் மூலம் கிடைத்திடும் வகைக்கும், இந்நீதிமன்றத்திற்கு யுக்தமாய் தோன்றும் இதர நியாய பரிகாரங்கள் கிடைத்திடும் வகைக்கும் உத்தரவிடக்கோரி, மனுதாரர்கள், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 24-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

**2. <u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம் பின்வருமாறு</u>** :

மனுதாரர்கள் உறவுமுறையில் சகோதர, சகோதரிகள் ஆவர். இம்மனுவின் 1-ஆம் மனுதாரர் தன்னை வாதியாகவும், இம்மனுவில் கண்டுள்ள 1 முதல் 3 எதிர்மனுதாரர்களை முறையே 1,3 மற்றும் 4 பிரதிவாதிகளாகவும், ஒரு ராஜாம்பாள் (இறந்துவிட்டார்) 2-ஆம் பிரதிவாதியாகவும், 4, 10 முதல் 13 எதிர்மனுதாரர்களை முறையே 5 முதல் 9 பிரதிவாதிகளாகவும் கண்டு, மேற்படியார்களுக்கு எதிராக, தாவா சொத்தினை வாதி மற்றும் 8,9 பிரதிவாதிகள் எப்பொழுதும் போல் அமைதியாக தொடர்ந்து பயிர் செய்து அனுபோகம் செய்து வருவதை,1 முதல் 3 பிரதிவாதிகளாவது, மேற்படியார்களின் ஆட்களாவது, ஏஜெண்டுகளாவது எந்த வகையிலும் தடை செய்யாமல் இருக்கும் வகைக்கு மேற்படியார்களை நிலைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் மூலம் தடை செய்து தீர்ப்பாக வேண்டியும், அதுபோல், தாவா சொத்தைப் பொறுத்து 2-ஆம் பிரதிவாதி, 1-ஆம் பிரதிவாதிக்கு சென்ற 12.10.1998-ல் எழுதி, பத்திர எண்.1169/1998 1-வது புத்தகம், 589 தொகுதி 31 முதல் 34 வரை பக்கங்களில் 15.10.1998 தேதியில் 7-ஆம் பிரதிவாதியால் பதிவு செய்யப்பட்ட பதிவான தான செட்டில்மெண்ட் பத்திரம் இல்லாநிலையது மற்றும் செல்லாதது (Null and void) என விளம்புகை செய்து தீர்ப்பாக வேண்டியும், இத்தாவாவின் செலவு வாதிக்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் மூலம் கிடைத்திடும் வகைக்கும், இன்னும் யுக்தமாய் தோன்றும் இதர நியாய பரிகாரங்கள் கிடைத்திடும் வகைக்கும் தீர்ப்பளிக்கக்கோரி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.109/2023 தாக்கல் செய்து, நிலுவையில் உள்ளது. இம்மனுதாரர்கள் தங்களை வாதிகளாக கண்டு, இம்மனுவில் கண்டுள்ள 2 முதல் 11 வரையிலான எதிர்மனுதாரர்களை 1 முதல் 10 பிரதிவாதிகளாகவும், 1-வது எதிர்மனுதாரரை

11-வது பிரதிவாதியாகவும், 12, 13 எதிர்மனுதாரர்களை 12 மற்றும் 13 பிரதிவாதிகளாகவும் கண்டு, தாவா "எ" ஷெட்யூல் சொத்தின் மொத்த விஸ்தீர்ணமான சர்வே எண்.12/1 0.98-ல் 0.59 சென்ட்டில் 0.29-1/2 சென்ட்டை பொறுத்து 11-ஆம் பிரதிவாதி, 1-ஆம் பிரதிவாதிக்கு சென்ற 28.07.2023-ல் எழுதி பத்திரம் எண்.2555/2023 1-வது புத்தகம் 2023-ஆம் ஆண்டு வரிசை எண்.1275, தாள்கள் 20 பக்கங்களில் 16.11.2023 தேதியில் 10-ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவான கிரையப் பத்திரம் இல்லா நிலையது மற்றும் செல்லத்தக்கதல்ல (Null and void ) என விளம்புகை செய்தும், அதுபோல், தாவா "எ" ஷெட்யூல் மொத்த விஸ்தீர்ணமான சர்வே எண்.12/1 0.98-ல் 0.59 சென்ட்டில் 0.29-1/2 சென்ட்டை பொறுத்து 11-ஆம் பிரதிவாதி, 2-ஆம் பிரதிவாதிக்கு சென்ற 28.07.2023-ல் எழுதி பத்திர எண்.2556/2023, 1-வது புத்தகம் 2023-ஆம் ஆண்டு வரிசை எண்.1276 தாள்கள் 20 பக்கங்களில் 16.11.2023 ந்தேதியில் 10-ஆம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதிவான கிரையப் பத்திரம் இல்லா நிலையது மற்றும் செல்லத்தக்கதல்ல (Null and void ) என விளம்புகை செய்தும், அதுபோல், 1-ஆம் பிரதிவாதி தாவா "எ" ஷெட்யூல் சொத்து பொறுத்து நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில் அதனை மறைத்து, 5 முதல் 8 பிரதிவாதிகளிடம் தவறான தகவல் கொடுத்து அதன் மூலம் தாவா "எ" ஷெட்யூல் சொத்து பொறுத்து பணி மற்றும் விசாரணை மேற்கொள்வதை தொடராமல் இருக்கும் வகைக்கு, மேற்படியாரை நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மூலம் தடை செய்தும், 1-ஆம் பிரதிவாதி தாவா "பி" ஷெட்யூல் சொத்து பொறுத்து நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் அதனை மறைத்து 5 முதல் 8 பிரதிவாதிகளிடம் தவறான தகவல் கொடுத்து, அதன் மூலம் தாவா "பி" ஷெட்யூல் சொத்து பொறுத்து அளவு பணி மற்றும் விசாரணை மேற்கொள்வதை தொடராமல் இருக்கும் வகைக்கு, மேற்படியாரை

நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மூலம் தடை செய்தும், தாவாவின் செலவு வாதிகளுக்கு, பிரதிவாதிகள் மூலம் கிடைத்திடும் வகைக்கும், நீதிமன்றத்திற்கு யுக்தமாய் தோன்றும் இதர நியாய பரிகாரங்கள் கிடைத்திடும் வகைக்கும் தீர்ப்பளிக்கக்கோரி, திட்டக்குடி, கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.24/2024 தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகின்றது. அசல் வழக்கு எண்.109/2023 உள்ள தாவா "எ" அட்டவணை சொத்தும், அசல் வழக்கு எண்.24/2024-ல் உள்ள "எ" அட்டவணை சொத்தும் ஒரே சொத்தாகும். மேற்படி இரண்டு வழக்குகளிலும் கேட்கப்பட்டுள்ள பிரதான பரிகாரம் சர்வே எண்.12/1 0.98-ல் 0.59-1/2 சென்ட் பொறுத்ததாகும். அசல் வழக்கு எண்.109/2023-ல் கோரப்பட்டுள்ள பரிகாரம், அசல் வழக்கு எண்.24/2024-ல் கேட்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன இரண்டு வழக்குகளிலும், முக்கிய பரிகாரங்கள் 1 -ஆம் மனுதாரர், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் சம்மந்தப்பட்டவையாகும். இரு வழக்குகளிலும் உள்ள தரப்பினர்கள் ஒருசாரர் ஆவர் மேலும், இரு வழக்குகளிலும் கேட்கப்பட்டுள்ள பரிகாரங்கள் தொடர் பரிகாரங்கள் ஆகும். எனவே, மேற்சொன்ன இரண்டு அசல் வழக்குகளையும் ஒரே நீதிமன்றத்தில் கூட்டு விசாரணை நடத்திட வேண்டியது அவசியமாக இருக்கின்றது. எனவே, திட்டக்குடி, கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.24/2024-ஐ திரும்ப பெற்று, மேற்படி அசல் வழக்கினை, திட்டக்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றி, அந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.109/2023 என்ற வழக்குடன் கூட்டு விசாரணை (Joint Trial) நடத்த உத்தரவிட வேண்டுமாய் மனுதாரர்கள் பிரார்த்திக்கிறார்கள்.

3. 4 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை. 1,2,3, 12 மற்றும் 13 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால், 1,2,3, 12 மற்றும் 13 எதிர்மனுதாரர்களைத் தோன்றாத் தரப்பினர்களாகக் கருதப்பட்டுள்ளனர்.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ எதுவும் முன்னிடப்படவில்லை.

5. **<u>இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாதெனில்</u>** :

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>பிரச்சனை</u>** :

6. திட்டக்குடி, கூடுதல் உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.24/2024-ஐ திரும்ப பெற்று, மேற்படி அசல் வழக்கினை, திட்டக்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்றி, அந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.109/2023 என்ற வழக்குடன் கூட்டு விசாரணை (Joint Trial) நடத்தவும், இம்மனுவின் செலவு தொகை மனுதாரர்களுக்கு, எதிர்மனுதாரர்கள் மூலம் கிடைத்திடும் வகைக்கும், இந்நீதிமன்றத்திற்கு யுக்தமாய் தோன்றும் இதர நியாய பரிகாரங்கள் கிடைத்திடும் வகைக்கும் உத்தரவிடக்கோரி, மனுதாரர்கள், உரிமையியல் விசாரணை முறைச் சட்டம் பிரிவு 24-ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

7. **இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன**.

8. மனு மற்றும் எதிருரை சங்கதிகள், மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது, திட்டக்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண்.109/2023-ல் உள்ள தரப்பினர்களும், திட்டக்குடி, கூடுதல் மாவட்ட நீதிமன்ற அசல் வழக்கு எண்.24/2024-ல் உள்ள தரப்பினர்களும், ஏறத்தாழ ஒரே தரப்பினர்கள் ஆவர் என்பதும், மேலும், உறவினர்கள் என்பதும், அசல் வழக்கு எண்.109/2023-ல் கண்டுள்ள சொத்து, அசல் வழக்கு எண்.24/2024-ல் " எ" அட்டவணை சொத்தாக உள்ளது என்பதும், இரு வழக்குகளில், "எ" சொத்தை பொறுத்து தான் பிரச்சனை எழுந்துள்ளன என்பதும், இரு வழக்குகளின் சங்கதிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவகைளாக உள்ளன என்பதும், இரு வழக்குகளில் முன்னிடப்பட வேண்டிய வாய்மொழி சாட்சியங்களும் ஆவண சாட்சியங்களும் ஏறக்குரைய ஒன்றே என்பதும், இரண்டு வழக்குகளிலும் இன்னும் விசாரணை தொடங்கப்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. இந்நிலையில், மேற்சொன்ன இரண்டு அசல் வழக்குகளும், வெவ்வேறு நீதிமன்றங்களில் நடைபெற்றால், முரண்பாடான தீர்வு காண நேரிட்டுவிடும், அதனால், பல சட்ட நடவடிக்கைளுக்கு வழிவகுத்துவிடும். மேற்கண்ட சூழ்நிலையில், மேற்சொன்ன இரண்டு அசல் வழக்குகளையும் ஒரே நீதிமன்றத்தில் கூட்டு விசாரணை செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும். அவ்வாறு கூட்டு விசாரணை செய்யப்படுவதினால், தேவையற்ற சட்ட நடவடிக்கைகள் எழுவதை தவிர்க்க முடியும். அதேபோல், முரண்பாடாற்ற தீர்வு காணமுடியும். எனவே, இம்மனுவானது அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, இவ்வாறாக இம்மனுவில் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படுகிறது.

9. முடிவாக, திட்டக்குடி, கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்கள், அசல் வழக்கு எண்.24/2024-ஐ, திட்டக்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டும் என்றும், திட்டக்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்கள், மேற்படி அசல் வழக்கு எண்.24/2024-ஐ பெற்று, திட்டக்குடி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள அசல் வழக்கு எண்.109/2023 என்ற வழக்குடன் இணைத்து கூட்டு விசாரணை நடத்தவும் (Joint Trial), இவ்வாறாக இம்மனுவை அனுமதித்தும் உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரிடையாக உரைக்கப்பட்டு, அவரால் நேரிடையாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 15-ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SUBATHIRA DEVI G

Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.04.15 19:37:03 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.

**இணைப்பு** :

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** :, இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

SUBATHIRA DEVI G

Digitally signed by SUBATHIRA DEVI G
Date: 2026.04.15 19:37:11 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

கடலூர்.